# நாமக்கல் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

## பிறப்பிப்பவர் திரு .சு.துரைசாமி, பி.எஸ்,சி(விவ)

*****

எண் அ2/ 527 / 2024 நாள் . 18.01.2024

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருமதி.ப.சரிதா, இளநிலை உதவியாளர் (பிணையம்), துணை வேளாண்மை விரிவாக்க மையம், வளையப்பட்டி, மோகனூர் வட்டாரம் - பணிவரன்முறை முடித்து ஆணையிட அரசின் விதித்தளர்வு ஆணை பெறப்பட்டது - இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை முடித்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை :

1) செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண 2359/PSD1/2020, நாள் 29.05.2020
2) சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செ.மு.ஆணை எண். அநிபி5/22094/2020, நாள்.05.08.2020.
3) நாமக்கல், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செ.மு.ஆணை எண் அ2/7198/2020(5), நாள் 14.08.2020.
4) சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் கடித எண் அபபி3/60999/2020, நாள் 29.12.2023ன்படி பெறப்பட்ட செயலர் / தலைவர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் செ.மு.ஆணை எண். 14319/CV-4(2) /2022-7, நாள்.16.12.2023.

*****

ஆணை:-

பார்வை (1) காணும் கடிதத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி -4ல் 2018-19 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டிற்கான தேர்வில் தேர்ச்சி பெற்று இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்கு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (2)ல் காணும் சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி, நாமக்கல் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (3)ன்படி இவ்வலுவலக கட்டுப்பாட்டில் மோகனூர் வட்டாரம், வளையப்பட்டி, துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவிளர் (பிணையம்)ஆக பணிநியமனம் செய்யப்பட்டு திருமதி ப.சரிதா அவர்கள் 21.08.2020 முற்பகல் பணில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (4)இல் காணும் சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் கடிதத்தின் மூலம் பெறப்பட்ட செயலர் / தலைவர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின் செயல்முறை ஆணையில், திருமதி ப.சரிதா அவர்களளின் ஜாதி மெய்தன்மை உறுதி செய்து மாநில கூர்ந்தாய்வு குழுவினால் ஆணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணியில் சேர்ந்த நாளான 21.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

2..

நகல் பெற்றுக்கொண்டேன்

24/01/24

| வ.எ ண் | பெயர் / பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை முடித்த நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | திருமதி ப.சரிதா இளநிலை உதவியாளர் (பிணையம்) | 21.08.2020 முற்பகல் | 21.08.2020 முற்பகல் | துணை வேளாண்மை விரிவாக்க மையம், வளையப்பட்டி, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம். மோகனூர் வட்டாரம். |

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2007-2008 முதல் 2012-2013 ஆம் ஆண்டிற்கான தேர்வில் நியமனம் தொடர்பாக சென்னை, உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள (W.P's) மனு மீதான தீர்ப்புக்கு இப்பணிவரன் முறை உட்பட்டதாகும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி பணிவரன்முறை முடித்து ஆணையிடப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு கால தொடர்பணி காலத்திற்குள் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே தனியர் இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகளைப் பெறத் தகுதியுடையவர் ஆவார்-

ஒம்/-சு.துரைசாமி,
வேளாண்மை இணை இயக்குநர்,
நாமக்கல்.

பெறுநர்-

திருமதி.ப.சரிதா,
இளநிலை உதவியாளர் (பிணையம்),
துணை வேளாண்மை விரிவாக்க மையம், வளையப்பட்டி.

வழி / & நகல் - வேளாண்மை உதவி இயக்குநர், மோகனூர்.

நகல் - சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களுக்கு
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. (அபபி3 பிரிவுக்கு)

நகல் - சென்னை , தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களுக்கு
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல் - செயல்முறை ஆணை கோப்பிற்கு.

நகல் - பணிப்பதிவேட்டிற்கு

உபரி 1

//உத்திரவுபடி//

ஆட்சி அலுவலர்